செ.வெ.எண்: 378 நாள்: 20.06.2019

**குடிநீர் திட்டப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்ற அலுவலர்களுக்கு உத்தரவு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, வேலாடிப்பட்டி, பழைய கந்தர்வக்கோட்டை, சுந்தம்பட்டி கிராமங்களில் வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் நடைபெற்று வரும் குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.06.2019) ஆய்வு செய்து தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடிநீர்திட்டப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்ற அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 428 குடிநீர் திட்டப்பணிகள் ரூ.17.14 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

மேலும் மாவட்டத்தில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டும், கிராமப் பகுதிகளுக்கு நேரடியாக சென்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, வேலாடிப்பட்டி, பழைய கந்தர்வக்கோட்டை, சுந்தம்பட்டி கிராமங்களில் வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் நடைபெற்று வரும் குடிநீர்

திட்டப்பணிகளை தொடர்புடைய அலுவலர்களுடன் சென்று நேரடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும் அனைத்து பொதுமக்களும் அவரவர் பகுதிகளில் குடிநீர் விநியோகம் தொடர்பாக சிறு பிரச்சினைகள் ஏற்பட்டால் கீழ்கண்ட அலுவலர்களின் தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.

நகராட்சிகளில் புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் 9944333200, அறந்தாங்கி நகராட்சி ஆணையர் 7397389967 என்ற கைபேசி எண்களில் புகார் தெரிவிக்கலாம்.

ஊராட்சி ஒன்றியங்களில் புகார் தெரிவிக்க அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607827, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607826, அலுவலக தொலைபேசி 04339 230622 என்ற எண்களிலும், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607828, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607829, அலுவலக தொலைபேசி 04333 271223 என்ற எண்களிலும், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607831, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607832, அலுவலக தொலைபேசி 04339 246251 என்ற எண்களிலும் புகார் தெரிவிக்கலாம்.

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607833, அலுவலக தொலைபேசி 04333 262070

என்ற எண்களிலும், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607837, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607838, அலுவலக தொலைபேசி 04322 221805 என்ற எண்களிலும், திருமயம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607841, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607842, அலுவலக தொலைபேசி 04333 274227 என்ற எண்களிலும் புகார் தெரிவிக்கலாம்.

விராலிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607874, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607864, அலுவலக தொலைபேசி 04339 220224 என்ற எண்களிலும், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607875, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607865, அலுவலக தொலைபேசி 04371 220538 என்ற எண்களிலும் புகார் தெரிவிக்கலாம்.

ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607844, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607845, அலுவலக தொலைபேசி 04371 233323 என்ற எண்களிலும், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607850, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607851, அலுவலக தொலைபேசி 04322 255226 என்ற எண்களிலும் புகார் தெரிவிக்கலாம்.

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607847, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி

எண் 7402607848, அலுவலக தொலைபேசி 04322 275728 என்ற எண்களிலும், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கைபேசி எண் 7402607854, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607863, அலுவலக தொலைபேசி 04371 250390 என்ற எண்களிலும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கைபேசி எண் 7402607876, அலுவலக தொலைபேசி 04322 221755 என்ற எண்களிலும் புகார் தெரிவிக்கலாம்.

அனைத்து பேரூராட்சி பகுதிகள் குறித்து புகார்களை தெரிவிக்க உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கைபேசி எண் 7824058067, மாவட்ட அளவில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் உள்ள 04322-222171 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு குடிநீர் புகார்களை தெரிவிக்கலாம்.

மேலும், புகார் தெரிவிக்கப்பட்டு 24 மணி நேரத்திற்கு மேல் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அதன் விபரத்தினை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) வாட்ஸ் அப் எண் 7402607859ல் தெரிவித்திடவும் பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், அண்டனூார் ஊராட்சி, வேலாடிப்பட்டி கிராமத்தில் நடைபெற்று வந்த 30 அடி உயரமுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் மேலே ஏறிச்சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தது அங்கிருந்தவர்களின் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பாலமுரளி, செயற்பொறியாளர் சேதுராமன், கந்தர்வக்கோட்டை வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேஷ், குமரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**